

இன்றைய செய்தி நாளைய வரலாறு

முரசொலி

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

திங்கள்கிழமை 16.03.2026

# பொருளாதார மேம்பாடும் பாதுகாப்பும்

திராவிட மாடல் அரசின் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பெண்களுக்கான பொருளாதார மேம்பாட்டுக்கும் பாதுகாப்புக்கும் மிகுந்த முக்கியத்துவம் தந்து வருகிறார். அதனால்தான் அவர் செல்லும் இடமெல்லாம் பெண்கள் அதிகமான அளவுக்குக் கூடி அன்பான வரவேற்பை வழங்கி வருகிறார்கள்.

இதனை எதிரிகளால் தாங்கிக் கொள்ள முடியவில்லை. அதனால் பெண்களுக்கு பாதுகாப்பு இல்லை என்ற பொய்யான பரப்புரையைச் செய்து வருகிறார்கள். இதனை பிரதமர் மோடியே செய்வதுதான் அதிர்ச்சி தருகிறது.

**மாண்புமிகு பிரதமர் அவர்களுக்கு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பெண்களுக்குச் செய்து தரும் திட்டங்களை பிரதமர் அறிந்தால் அப்படி பேசி இருக்க மாட்டார்.**

வீட்டில் இருக்கும் பெண்களின் உழைப்புக்கு அங்கீகாரம் தரும் வகையில் அவர்களுக்கு உரிமைத் தொகை தந்து வருகிறார் மாண்புமிகு முதலமைச்சர். பெண்களின் உழைப்பை அங்கீகரிக்கும் விதமாக மதிக்கும் விதமாக மாதந்தோறும் ஆயிரம் ரூபாய் வழங்கப்படும் என்று அறிவித்தார் மாண்புமிகு முதலமைச்சர். இப்போது ஒரு கோடியே 31 லட்சம் மகளிர் மாதம் தோறும் ஆயிரம் ரூபாய் பெறுகிறார்கள். **“எங்க அண்ணன் ஸ்டாலின் தரும் மாதாந்திர சீர்’’ என்று சொல்கிறார்கள் பெண்கள்.’’ இது உதவித் தொகை அல்ல, உரிமைத் தொகை’’** என்கிறார் முதலமைச்சர்.

பெண்களின் பொருளாதார உரிமையை உயர்த்தி இருக்கிறது இத்தொகை, தன்னம்பிக்கையை உயர்த்திருக்கிறது இந்தத் தொகை. இந்தத் திட்டத்தை பல்வேறு மாநிலங்கள் இப்போது பின்பற்றுகிறது. சில மாநிலங்கள் கொடுத்ததை நிறுத்தி விட்டது. அறிவித்த எண்ணிக்கையைக் குறைத்து விட்டார்கள். ஆனால் உரிமைத் தொகை பெறுகிறவர்களின் எண்ணிக்கையை உயர்த்தியது மாண்புமிகு மு.க.ஸ்டாலின் அவர்கள் தான். இப்படிக் கொடுப்பதை தடுக்கப் பார்த்தது பா.ஜ.க.. ஒருவரை உச்சநீதிமன்றத்தில் வழக்குப் போட வைத்தார்கள். அதை முன்கூட்டியே உணர்ந்து மூன்று மாதத்துக்கான தொகையையும், 2 ஆயிரம் ரூபாயை கோடை நிதியாகவும் தந்தவர் மாண்புமிகு மு.க.ஸ்டாலின் அவர்கள். இந்த ஒரு திட்டமே கோடிக்கும் மேற்பட்ட பெண்களை மகிழ்வித்த திட்டமல்லவா?

“முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் எனும் நான்...” என்று முதல் அமைச்சராகப் பொறுப்பேற்றுக் கொண்ட அன்றே கோட்டைக்குச் சென்று இட்ட முதல் கையெழுத்து, ‘**பெண்களுக்கு கட்டணமில்லா பேருந்து**’ என்பதுதான். இதற்கு விடியல் பயணம் என்று பெயர் சூட்டினார் முதலமைச்சர். மாதம் தோறும் 600 முதல் 1200 ரூபாய் வரைக்கும் பெண்களுக்கு போக்குவரத்துச் செலவை மிச்சம் செய்கிறது இந்த திட்டம். சொந்த ஊருக்குள் குறைந்த சம்பளத்தில் வேலை பார்ப்பதை மாற்றி, வெளியூருக்கு வந்து அதிக ஊதியம் பெறுகிறார்கள் பெண்கள். பேருந்துகளின் எண்ணிக்கையையும் அரசு அதிகப்படுத்திவிட்டது.பிங்க் வண்ண பேருந்துக்கு ‘**ஸ்டாலின் பஸ்**’ என்றே அடையாளச் சொல்லாக ஆக்கிவிட்டார்கள் பெண்கள். இது பெண்களுக்கு தினந்தோறும் பயனுள்ள திட்டமாக இருக்கிறது. லட்சக்கணக்கான பெண்களை தினந்தோறும் மகிழ்விக்கும் திட்டமாக இருக்கிறது.

அரசுப் பள்ளியில் படித்து உயர் கல்விக்கு வரும் மாணவியருக்கு மாதம் தோறும் ஆயிரம் ரூபாய் வழங்கப்படுகிறது. இதன்பிறகு உயர் கல்வி பெற வரும் மாணவியரின் எண்ணிக்கை அதிகமாகி வருகிறது. 41 விழுக்காடு கூடி இருக்கிறது.பணிபுரியும் பெண்களுக்கு பாது காப்பான சூழலை ஏற்படுத்துவதற்காக, அனைத்து மாவட்டங்களில் தோழி விடுதிகள் இதுவரை தொடங்கப்பட்டுள்ளன. மகளிர் சுய உதவிக்குழுக்கள் லட்சக்கணக்கில் உருவாக்கப்பட்டுள்ளது. கோடிக்கணக்கில் அவர்களுக்கு கடனுதவி தரப்பட்டு தொழில் தொடங்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது.

பெண்கள் பெயரில் பதியப்படும் சொத்துகளுக்கான பதிவுக் கட்டணத்தில் ஒரு விழுக்காடு குறைக்கப்பட்டுள்ளது. பெண்கள் பெயரில் வீடு,மனை உள்ளிட்ட சொத்துகள் பதிவு செய்யப்பட்டால் ஒரு விழுக்காடு பதிவுக் கட்டணம் ரத்து செய்யப்படுகிறது. 10 லட்சத்துக்கும் குறைவான மதிப்புள்ள வீடு, மனை, விவசாய நிலமாக இருந்தால் இந்த சலுகை பெறலாம். நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியத்தின் சார்பில் புதிதாக வீடு ஒதுக்கும் போது சம்பந்தப்பட்ட குடும்பத்தில் உள்ள பெண்கள் பெயரில் தான் வீடுகள் ஒதுக்கப்படும் என்று அரசு அறிவித்துள்ளது. பெண்களுக்கு அதிகாரம், சொத்துரிமை தரும் முடிவாக இது அமைந்துள்ளது.

**குழந்தைத் திருமணம், குழந்தை பாலியல் வன்கொடுமை, குடும்ப வன்முறை உள்ளிட்ட பிரச்சனைகளுக்கு தீர்வு காணும் பாலின வள மையங்கள் உருவாக்கப்பட்டுள்ளன.**

**சிறுமிகள் மீதான பாலியல் வன்கொடுமை, 18 வயதுக்கு உட்பட்ட பெண்கள் மீதான கூட்டுப் பாலியல் வன்கொடுமை குற்றம் செய்வோருக்கு மரண தண்டனை விதிக்கும் சட்டம் கொண்டு வரப்பட்டுள்ளது.டிஜிட்டல் முறை, மின்னணு ரீதியான குற்றங்களுக்கு 3 ஆண்டு சிறை தண்டனை விதிக்கப்படும். முதல் தண்டனையாக இருந்தால் 5 ஆண்டும், அதற்குப் பிறகும் இருந்தால் 10 ஆண்டும் சிறைத் தண்டனை வழங்கப்படும்.கல்வி நிலையங்கள், விடுதி, திரையரங்குகள், வணிக வளாகங்களில் கண்காணிப்பு கேமரா பொருத்த வேண்டும். வன்கொடுமைக்கு ஆளான பெண்ணின் அடையாளத்தை வெளிப்படுத்தினால் 3 முதல் 5 ஆண்டு சிறைத் தண்டனை தரப்படும்.**

**பெண்ணின் கண்ணியதை அவமதித்தல், பெண்ணை பின் தொடர்தல், மிரட்டுதல், ஆசிட் ஊற்றுதல் ஆகியவற்றுக்கும் தண்டனை அறிவிக்கப்பட்டது.**

**இப்படி பெண்களுக்கு பொருளாதார மேம்பாடும், பாதுகாப்பும் உறுதி செய்யும் கழக அரசு மீது களங்கம் ஏற்படுத்த நினைத்தால் அதனை பெண்களே ஏற்க மாட்டார்கள்.**

●●

## திருவொற்றியூரில் சமுதாய வளைகாப்பு விழா!

சென்னை, மார்ச் 16-

சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்டம் சார்பில் திருவொற்றியூரில் சமுதாய வளைகாப்பு விழா ஸ்ரீ சாய் மகாலில் சிறப்பாக நடைபெற்றது.

திருவொற்றியூர் சட்டமன்ற உறுப்பினர் கே.பி.சங்கர் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்ச்சியில் திட்ட ஒருங்கிணைப்பாளர் திருமதி.அருணா அனைவரையும் வரவேற்றார்.

ஆகாஷ் மருத்துவமனையின் உரிமையாளர் மருத்துவர் ஏ.செல்வராஜ் குமார் கலந்துகொண்டு பொது மருத்துவம் குறித்து ஆலோசனைகள் வழங்கி வாழ்த்தினார்.

மருத்துவர் பிரியா செல்வராஜ் குமார் கலந்து கொண்டு பெண்களின் மகப்பேறு காலம் குறித்தும், மகப்பேறு காலத்தில் கடைப்பிடிக்க வேண்டிய உணவு முறைகள், உடற்பயிற்சி குறித்து ஆலோசனை வழங்கினார்.

குழந்தைகள் நல மருத்துவர் டாக்டர் கா.பிரவீன் கலந்து கொண்டு குழந்தைகள் பராமரிப்பு குறித்தும், தாய்ப்பாலின் அவசியத்தையும் எடுத்துரைத்தார் .

திருவெற்றியூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் கே.பி.சங்கர் தனது துணைவியார் கஸ்தூரி சங்கர் அவர்களுடன் கலந்து கொண்டு திராவிட மாடல் அரசு பெண்களுக்கு செய்து வரும் நலத்திட்டங்களை எடுத்துரைத்து, தங்களின் குடும்பத்தில் ஒருவனாக இருந்து இப்படிப்பட்ட ஒரு சமத்துவ வளைகாப்பு நிகழ்ச்சியை நடத்த வாய்ப்பு வழங்கியதை பெறுமையாக கருதுவதாக தெரிவித்தார்.

மேலும் அனைவரும் நல்ல முறையில் குழந்தை பெற்றெடுக்க வேண்டும் என்று மாநில மீனவர் அணி துணைத் தலைவர் திருவெற்றியூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் கே.பி.சங்கர் வாழ்த்தி மகிழ்ந்தார். நிகழ்ச்சிக்காக உழைத்த அனைத்து அங்கன்வாடி பணியாளர்களுக்கும் நன்றியை தெரிவித்தார்.

இந்நிகழ்வில் இறுதியாக 5வது வட்டக் கழக செயலாளர், மாமன்ற உறுப்பினர் கே.பி.சொக்கலிங்கம் நன்றி உரையாற்றினார்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், நேற்று (15.3.2026) கவிப்பேரரசு வைரமுத்து அவர்களுக்கு ஞானபீட விருது அறிவிக்கப்பட்டுள்ளதையொட்டி, அவரது இல்லத்திற்கு நேரில் சென்று வாழ்த்து தெரிவித்தார்.

## கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் தலைமையில் – இன்று

# தி.மு.க. மாவட்டக் கழகச் செயலாளர்கள் கூட்டம்!



### பொதுச் செயலாளர் துரைமுருகன் அறிவிப்பு!

**கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் “தி.மு.க. மாவட்டக் கழகச் செயலாளர்கள் கூட்டம்” இன்று (16-03-2026 - திங்கட்கிழமை) காலை 10.30 மணி அளவில், சென்னை, அண்ணா அறிவாலயம் “கலைஞர் அரங்கில்’’ நடைபெறும். அதுபோது மாவட்டக் கழகச் செயலாளர்கள் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளும்படி கேட்டுக்கொள்கிறேன்.**

**பொருள் : 2026 சட்டப்பேரவைத் தேர்தல்**

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை - 18,

**துரைமுருகன்**
பொதுச் செயலாளர்,
தி.மு.க.




தென்காசி வடக்கு மாவட்ட தி.மு.க.சார்பில் ‘ஸ்டாலின் தொடரட்டும் தமிழ்நாடு வெல்லட்டும்’ சங்கரன்கோவில் சட்டமன்றத் தொகுதி சட்டமன்றத் தேர்தல் 2026 தேர்தல் பணிகள் ஆலோசனைக் கூட்டம் சங்கரன்கோவில் ரயில்வே பீடர் சாலையில் உள்ள ஜெய் சாந்தி மகாலில் தென்காசி வடக்கு மாவட்ட செயலாளர் ஈ.ராஜா எம்.எல்.ஏ.தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் முன்னாள் முதல்வர் ஓ.பன்னீர்செல்வம் பங்கேற்று பல்வேறு ஆலோசனைகளை வழங்கி உரையாற்றினார். உடன் அமைச்சர் கே.கே. எஸ்.எஸ்.ஆர்.ராமச்சந்திரன்,முன்னாள் எம்.பி.க்கள் ஓ.பி.ரவீந்திரநாத், கோபாலகிருஷ்ணன்,முன்னாள் எம்.எல்.ஏ.க்கள் அய்யப்பன், முத்துச்செல்வி,உள்பட கழக நிர்வாகிகள் பலர் உள்ளனர்.




தூத்துக்குடி VVD சிக்னல் அருகே மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணியின் சார்பில், தமிழ்நாட்டுக்கு திட்டங்களும் இல்லை!அடுப்பு எரிக்க கேஸ் சிலிண்டரும் இல்லை!! எனும் ஒன்றிய NDA அரசையும், அதற்குத் துணை போகும் அடிமைக் கூட்டணியும் கண்டித்து ஆர்ப்பாட்டம் அமைச்சர் கீதா ஜீவன் தலைமையில் நடைபெற்றது உடன் மாநகராட்சி மேயர் ஜெகன் பெரியசாமி, மாநகரச் செயலாளர் ஆனந்த சேகரன், காங்கிரஸ் ஏ.பி.சி.வி. சண்முகம் , துணை ராஜ்மோகன் செல்வின், மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி நிர்வாகிகள் பெருந்திரளாக கலந்து கொண்டனர்.



ஒன்றிய பா.ஜ.க. அரசை எதிர்த்து மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் அமைச்சர் அனிதா ஆர். ராதா கிருஷ்ணன் தலைமையில் நடைபெற்றது. கூட்டத்தில் மாநில வர்த்தக அணி செயலாளர் எஸ்.ஆர்.எஸ்.உமரி சங்கர், மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் பை. மூ.ராமஜெயம், தலைமை செயற்குழு உறுப்பினர் பில்லா ஜெகன், நகர்மன்ற தலைவர் சிவ ஆனந்தி ரமேஷ், ஒன்றிய செயலாளர் ஏ.பி. ரமேஷ் நகர செயலாளர் வாள் சுடலை, மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி நிர்வாகிகள் பெருந்திரளாக கலந்து கொண்டனர்